உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஹு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்: இராக்ஷத ஹு பங்குனிமீ சூஉ வெள்ளிக்கிழமை (19-3-1976) [இல: சஎ

நூற்றிருபத்தைந்தாமாண்டு நிறைவு காணும்

# பிறந்த நாள் நினைவு நுகர்ச்சி விழா

## ஈழத்தின் தலைசிறந்த ஏந்தல் இராமநாதனின் இணையிலாத் தொண்டின் இலட்சியம் என்ன?

## கருத்து விளக்கும் கட்டுரைப் போட்டி

பரோபகாரச் செம்மல் பொன் இராமநாதன் பூவுலகில் உதித்த புண்ணிய தினம், 1851 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் பதினரும் நாள்.

இவ்வாண்டு நாலாம் மாதம் பதினரும் நாள் இப்பெரு நிகழ்ச்சியின் நூற்றிருபத்தைந்தாவதாகும்.

இலங்கை வாழ் மக்களுக்கு மட்டுமல்ல இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, மலேசியா போன்ற நாட்டிலுள்ளவர்களுக்கும் மன எழுச்சியை வரவழைக்கும் நாள் 16-4 76.

இத்தகைய உத்தமத் தினத்தை ஈழத்தில் உள்ளத்துணர்ச்சியுடன் ஞாபகத்துக்கழைக்கப் பல அறிஞர்கள் முன்வந்திருக்கின்றனர்.

இந்துசாதனமும் இத்தொண்டில் முந்தி நிற்க வேண்டியது சகசமே.

ஆகவே கருத்துவிளக்கும் கட்டுரை (ஆங்கிலத்தில் ஆனாலும் சரி) எழுதிப் போட்டியிற் கலந்துகொள்பவர்கள் தங்கள் கட்டுரைகளை 'ஆசிரியர் இந்துசாதனம்' காங்கேசன்துறைவீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 5 4-1976 திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

திறமையான முதல் மூன்று கட்டுரைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

— ஆசிரியர்

அற்புதத் திருவந்தாதி பாடிய

## அம்மையார் குருபூசை இன்று (19-3-76)

அம்மையே என்று அப்பன் இறைவன் அழைக்க அருள்பெற்ற காரைக்கால் அம்மையார் குருபூசைத் திருநாள் இன்று.

அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதியின் அருமையை அறிபவர்கள் சைவநெறியை அறிவார்கள்.

இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான்
தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் —
இறைவனே
எந்தாய் எனஇரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான்.

மட்டக்களப்பில்

# தமிழ் ஆராய்ச்சி மாநாடு

## மூன்று தினங்கள் நிகழும் மாநாட்டில் கவியரங்கும் கருத்தரங்கும் உரைகளும்

வாழைச்சேனையில் இன்று நிகழும் ஆரம்ப ஊர்வலத்துடன் தொடங்கும் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளைத் தொடரும்.

நூற்றுக்கணக்காக ஆய்வுக் கட்டுரைகள் ஆராயப்படும். புத்தகக் கண்காட்சியும் ஓர் விசேட நிகழ்ச்சியாகும். விபுலானந்த மணிமண்டபத்திற் கருத்தரங்கு நடைபெறும்

# திருமுறைப் பண்களை நாம் கண்களெனப்போற்றுவோம்

## நல்லை ஆதீனப் பண்ணிசைப்புலவர் சம்பந்தனுக்கு சுவாமிகள் பாராட்டு

### மாதந்தோறும் பண்ணிசைக் கச்சேரி நடாத்த ஆதீனத்தில் ஒழுங்குகள்

"சைவத்தின் கண்களெனத் திகழ்கின்ற, திருமுறைப் பண்களை, நாம் எமது கண்களெனப் போற்றி வளர்த்தல் வேண்டும். நல்லை ஆதீனம் திருமுறைகளை வளர்ப்பதற்கு மேன்மேலும் பலவிதமான சிறந்த ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது. எமது ஆதீனப் பண்ணிசைப் புலவராக, பண்ணிசைச் செல்வன் திரு. இராசையா — திருஞானசம்பந்தனை நாம் தற்போது நியமித்துள்ளோம். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 5 மணிவரை திருமுறை வகுப்புக்கள் எமது ஆதீனத்தில் நடைபெற்று வருகின்றன ஞானசம்பந்தராதீனத்தில் ஞானசம்பந்தன் பண்ணிசை புலவராக இருப்பது மிகவும் பொருத்தமாகும்."

நல்லை ஞானசம்பந்தராதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகள், பண்ணிசைப் புலவர் ஞானசம்பந்தனைப் பாராட்டிப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாதாந்தம் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் நடைபெறவுள்ள, நல்லை ஆதீனப் பண்ணிசை அரங்கை சுவாமிகள் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்கள்.

'அமரர் பண்ணிசை வள்ளல், தாவடி ஊர், திரு. செ. இராசையாவின் வழியில் மைந்தனுகிய ஞானசம்பந்தன் பண்ணிசைப் பணியை மேற்கொண்டுள்ளது பாராட்டிற்குரியதாகும்" என ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் மேலும் குறிப்பிட்டார்.

அண்மையில் மலேசியா சென்று திரும்பிய கோண்டாவில் நாதசுரக்கலைஞர்கள் திரு. கே. கானமூர்த்தி சகோதரர்களுக்கும் இவ் வைபவத்தில் பாராட்டு அளிக்கப்பட்டது.

சங்கீத வித்துவான் செல்வி பாக்கியலட்சுமி நடராசா வயலினும், சங்கீத பூஷணம் ஸ்ரீ அரியநாயகம் புல்லாங்குழலும், மிருதங்க பூஷணம் திரு. எம். என். செல்லத்துரை மிருதங்கமும் வாசித்துப் பண்ணிசைக் கச்சேரியைச் சிறப்பித்தார்கள்.

— "நாதன்"

### திருக்கேதீச்சவரத்துக்குக் கருங்கற் சிலைகள்

மாமல்லபுரச் சிற்பக் கலாசாலையில் செதுக்கப்பட்ட முப்பத்தாறு கருங்கற் சிலைகளைத் திருக்கேதீச்சுவர திருப்பணிச் சபைச் செயலாளர் திரு. நமசிவாயம் அவர்கள் தனுஷ்கோடி மார்க்கமாகத் திருக்கேதீச்சுவரத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

இச்சிலைகளை திரு. வி. கணபதி ஸ்தபதியின் மேற்பார்வையில் ஆக்கப்பெற்றன.

இவ்விக்கிரகங்களின் பிரதிஷ்டை சிவாகம முறைப்படி நிகழவிருக்கின்றது.

### பனங்கட்டி உற்பத்திக்கு இந்திய நிபுணர் உதவும் பயிற்சி வகுப்பு

பேராசிரியர் இராவ் இந்திய நாட்டின் சீனி உற்பத்தித் தொழில் நிபுணர். இவர்கள் பருத்தித்துறைப் பகுதி பனங்கட்டித் தொழிற்சாலை, புலோலி தெங்கு பனம் பொருள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கப் பனங்கட்டி உற்பத்தி நிலையம் ஆகியவற்றில் பயிற்சி வகுப்பொன்றை நடாத்தினர்.

[வளர்ச்சி 2-ம் பக்கம்)

### யாழ். நல்லூர், பாணன்குளம் நாச்சி அம்பாள் கோவிலில் இன்னிசை விரிவுரை

ஷ அம்பாள் ஆலய மகாகும்பாபிடேகவிழா 18-3-76.ல் நிறைவுற்றதையடுத்து, நல்லை ஆதீன பரமாசாரிய சுவாமிகளால் தினமும் "அன்னை அபிராமி" என்னும் பொருள்பற்றி இன்னிசை விரிவுரை நடாத்தப்பெறுகின்றது. மேற்படி தேவஸ்தான சார்பில் "ஓவியக் கலை மணி" நல்லூர் திரு. . கெங்காதரனுக்கு யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஞானச்சந்திரன பொன்னுடை போர்த்தினா. திரு: தி. முருகேசம்பிள்ளை உட்படப பலர் ஓவியக் கலைச் செல்வரைப் பாராட்டினர், (ந.நி

சைவ சமயத் தகவல் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஸூ பங்குனி மீ ௬ உ வெள்ளி

## மேற்கில் - மேன்மைகொள் சைவநீதி

உலகாயுத உணர்ச்சி நாடுகள் மேற்கே உள்ளன, ஆங்கு மேன்மைகொள் சைவ நீதிக்கிடம் அணுவளவும் இருக்க முடியாது. இவ்வாறு கிழக்குக் கண்டத்தில் வாழும் மக்கள் எண்ணிய காலம் ஒன்றுண்டு. சுவாமி விவேகானந்தா அமெரிக்கநாட்டில் சமயச் சொற்பெருக்காற்றிய பின் வள்ளல் பொன். இராமநாதன் மத போதனைக்காதாரமான கருத்துக்கள் வழங்கினவகையில் அமெரிக்க மக்கள் சைவம் என்றொரு சமயம் உண்டு அது பரிபூரண உண்மையை விரிவாக விளக்கும் பான்மையில் ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி வகுக்கின்றதென்று சற்றே அறிந்தார்கள்; ஆராயத் தொடங்கினார்கள் உண்பதும் உடுப்பதும் உறங்குவதுந்தான் உலக வாழ்க்கையல்ல என்ற உண்மையை உணர்ந்தார்கள். கிழக்கு நோக்கி ஆத்ம ஞானம் பெறுவதற்குக் குழுவினர் பலராக யாத்திரைசெய்யவும் முன்வந்தார்கள் இதன் பயனாக அமெரிக்க மாபெரும் நகரமாம் நியூயோர்க்கென்னுமிடத்திற் சைவத் திருக்கோயில் அமைப்பதற்கு ஆங்குவாழ் இந்திய - இலங்கை மக்களுக் குறுதுணையாக அந்நாட்டு மக்கள் பணி புரிந்திருக்கின்றனர்.

இவ்வாறே இங்கிலாந்து தேசமும் ஆசிய கண்டத்து மக்களுக்கு விபரீதமான்தாய்த் தோன்றியது முன்னாட்களில். இலண்டன் மாநகரிலும் இணைந்த இடங்களிலும் இந்தியர்கள், இலங்கையர் ஆயிரம் ஆயிரமாக வாழ்க்கை நடத்தும் வாய்ப்பின் விளைவாகச் சைவ ஆலயங்கள் நிறுவப்படலாயின. ஆறுபடை வீடுகளில் அமர்ந்து பேரருளும் பெம்மான் அடியார்கள் அவனியில் எங்கெங்குறுகின்றார்களோ அங்கங்கு காட்சியளித்துக் கருணை புரிவான் என்ற கருத்துக்குப் பொருத்தமாக இலண்டன் முருகன் கோயிலில் ஆறுமாமுகப் பெருமான் கோலமாய்க் குலவுகின்றான் என்றால் மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கி மக்கள் உய்யவழி காணும் பேற்றுக்குரியவராகின்றனர் என்று பெருமிதத்துடன் கூறி களிபேருவகை கொள்கின்றோம். "ஞாலம் நின் புகழ் ஆக வேண்டும் .... ....", என்று சைவசீலர்கள் திருவாய்மலர்ந்த திருமுறைகள் இந்த எண்ணத்தை மேலும் சிந்திக்க வைக்கின்றன

இத்தகைய தத்துவம் வாய்ந்த சிவதொண்டின் சிறப்பை நாம் போற்றும் வேளையில் இலண்டன் முருகன் கோயிலுக்காக இயங்குகின்ற திருப்பணித் தொண்டினையும் பாராட்டுகின்றோம். ஆலயம் அமைப்பது தொன்று. அதனை அணியாக ஆதரித்துப் பேணுவது இன்னொன்று. தொடர்ந்து தொண்டாற்றப் பெருதொழியின், அடிக்கடி திருத்த வேலைகள் வேண்டப்படும்; எனவே ஆரம்பத்திலேயே ஆகமம் முறைப்படி உரிய திருப்பணியை இயற்றுவதே முறை. இத்துணைப் பெருமையும் அத்துணை அருமையும் சித்திக்கும் இலண்டன் முருகன் கோயிலுக்குத் திருப்பணிச் சேவை செய்வது சிறந்த சிவதொண்டாகும். அரும் பெருஞ் சிவப் பணியைப் புரிய முன்வந்துள்ள திருப்பணிக் குழுவுக்கும், அவர்கள் எடுக்கவுள்ள அருட்பணிகளுக்குப் பேராதரவு புரிந்து வரும் அன்பர்களுக்கும் நிதிஉதவி புரிந்துவரும் பெரியோர்களுக்கும் எமது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். வாழ்க சிவநெறி.

"வையகமுந் துயர் தீர்கவே"

சைவபரிபாலன சபையார் 9-11-1975-ல் நடாத்திய

## இலங்கைச் சைவசமயபாடப் பரீட்சையில் பாடசாலைப் பரிசில்கள்

(முன் வளர்ச்சி — 2)

### நாவற்குழி மகா வித்தியாலயம்

| | |
|---|---|
| சித்திராதேவி இராமலிங்கம் | 10 |
| ஸ்ரீதேவி செல்லையா | 7 |
| ஜெயசிங்கம் சுந்தரம் | 6 |
| தவேந்திரன் சுப்பிரமணியம் | 5 |
| மணிவண்ணன் மகாலிங்கம் | 3 |

### யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

| | |
|---|---|
| வசந்தா திருச்செல்வம் | 9 |
| முரளிதரன் பத்மநாதன் | 6 |
| கீதா பத்மநாதன் | 5 |
| சேந்தன் பத்மநாதன் | 4 |

### வேலணை மத்திய மகா வித்தியாலயம்

| | |
|---|---|
| ஜெயகௌரி குமாரசாமி | 10 |
| கோவிந்தராணி சோதிலிங்கம் | 9 |
| சுவர்ணலதா செல்லத்தம்பி | 8 |
| வேல்வேந்தன் சின்னராசா | 7 |
| அகிலராணி தேவராசா | 6 |

### புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்

| | |
|---|---|
| கிருஷ்ணானந்தம் சாமிநாதன் | 9 |
| சாந்திமதி சந்திரசேகரி | 8 |
| தேவராசா பொன்னுத்துரை | 7 |
| இந்திரா தம்பிப்பிள்ளை | 6 |

### பெரியபுலம் மெ. மி. பாடசாலை

| | |
|---|---|
| வசந்தி சண்முகம் | 9 |
| சத்தியகுமார் பரமலிங்கம் | 8 |
| சுகந்தி சண்முகம் | 7 |
| ரேவதி பத்மநாதன் | 3 |

### அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

| | |
|---|---|
| பத்மலோசனி பத்மநாதன் | 8 |
| இரஜிதா இராமலிங்கம் | 5 |
| யுகநாயகி முருகேசு | 4 |

### தொண்டைமானாறு மகா வித்தியா

| | |
|---|---|
| மகேந்திரராசா நாகலிங்கம் | 8 |
| ஸ்ரீரஞ்சனி குமாரசிவம் | 7 |
| பகீரதி இரத்தினசிங்கம் | 6 |
| கிருபாகரன் இராசேந்திரம் | 5 |
| வனிதா மணி சரவணப்பெருமாள் | 3 |

### ஸ்ரீ கணேச வித்தியாலயம் புங்குடுதீவு

| | |
|---|---|
| சிவகுமாரராசா சிவசம்பு | 8 |
| வத்சலியா செல்வரத்தினம் | 7 |
| சியாமளாதேவி கதிரவேலு | 6 |

### கனகரத்தினம் மத்திய மகா வித்தி

| | |
|---|---|
| இரஞ்சினி இராமுப்பிள்ளை | 8 |
| கிருஷ்ணவதனி கனகரத்தினம் | 7 |
| ஜெயக்குமார் தம்பாப்பிள்ளை | 6 |

### அல்லாரை காந்திய சேவா சங்கம்

| | |
|---|---|
| இளங்கோ கார்த்திகேசு | 7 |
| குகனேசன் கணபதிப்பிள்ளை | 5 |

### ஓமந்தை மகா வித்தியாலயம்

| | |
|---|---|
| குமஜெயம் செல்லத்துரை | 7 |
| சாந்தி பத்மநாதன் | 6 |

### ஸ்ரீவிக்னேஸ்வர வித். நல்லூர் தெற்கு

| | |
|---|---|
| ரவீந்திரராணி ஜெகநாதன் | 7 |
| ரோகினி கனகராசா | 6 |
| சாந்தினி கந்தையா | 5 |
| விவேகானந்தன் ஜெகநாதன் | 3 |

### கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி.

| | |
|---|---|
| சபானந்தன் இராசையா | 7 |
| கமலேஸ்வரி வாரித்தம்பி | 6 |
| உஷாதேவி கந்தசாமி | 5 |
| நிர்மலதாஸ் அம்பலவாணபிள்ளை | 3 |

### வட்டு இந்துக் கல்லூரி

| | |
|---|---|
| வசந்தகுமாரி பாலசுப்பிரமணியம் | 6 |
| சுமங்கலி சுப்பிரமணியம் | 5 |
| சீதாவதி புவனேஸ்வரன் | 3 |

### காரை. சுந்தரமூர்த்தி வித்தியாலயம்

| | |
|---|---|
| சரோஜினிதேவி குகநேச சர்மா | 8 |
| இராசமலர் தம்பிராசா | 7 |
| புஷ்பவதி தில்லைநாதன் | 6 |
| தனலட்சுமி மார்க்கண்டு | 3 |

### ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி. புங்குடுதீவு

| | |
|---|---|
| தர்மவாஸ் தர்மலிங்கம் | 8 |
| மகேந்திரராசா நாகலிங்கம் | 7 |
| ஜெனோவதாஸ் சத்தியநாதன் | 6 |
| பிரேமலலிதா நடராசா | 5 |
| கெங்காதரன் இராசலிங்கம் | 4 |
| சிவகுமாரி குணரத்தினம் | 3 |

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம், 5-3-76. பரீட்சைக் காரியதரிசி.

(வளரும்)

## பெரிய புராணம் பேசும் செங்கோன்மை

[ ஆசிரியர் திரு. ஹி. சிவரத்தினம் ]

(முன் வளர்ச்சி – 3)

"ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணராமல், தருமந்தன் வழிச் செல்கை கடனென்று தன் மைந்தன், மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன் அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோ தான்"
(பெரிய புராணம்)

என்னுந் திருவிருத்தத்தாலே தெளியப்படுதலின் இவர் எவ்வாற்றானும் இரக்கமுடையவரென்றே அணியப்படும். இவர் நடுவுநிலைமையின் வழுவாமை,

"என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே, என்னியனே ருயிர்கொன்றா லவனைக் கொல் வேனுனும், றொன் மனுநூற் றொடைமனுவாற் றுடைப்புண்ட தெனும் வார்த்தை, மண்ணுலகிற் பெறமொழிந்திர் மந்திரிகள் வழக்கென்றான்."
(பெரிய புராணம்)

என்பதனுல் உணர்க.

முட்டாது செங்கோல் செலுத்திய அரசனை அச் செங்கோலே காக்குமென்பது

இறைகாக்கும் வையக மெல்லா மவனை முறை காக்கு முட்டாச் செயின்

என்னுந் திருக்குறளால் அறிக.

இதுகாறும் கூறியவற்றால், இரக்கமும் நடுவுநிலைமையும் பெரும் புண்ணியமென்பதும், அவையில்லாமை பெரும் பாவமென்பதும் குற்றம் செய்தவர்களைத் தண்டித்தல் அக்குற்றம் செய்தார்க்கும் பிற உயிர்க்கும் நன்மை பயத்தலால் அது இரக்கமாவதன்றி வன்கண்மையாகாதென்பதும் அத்தண்டஞ் செய்யாதொழிதலே வன்கண்மை எனப்பட்டுத் தமக்கும் பிறர்க்கும் தீமை பயக்குமென்பதும் பெறப்படும்.

செங்கோன்மை எனப்படுவது ஒரு பக்கத்திலே சாயாமல் செவ்விய கோல் போலமைவதேயாகும். இன்னும் உயிர்களைக் காத்தல் தருமமாயினும், பசுக்களையும் பெண்களையும், பிராமணரையும், சிவனடியார்களையும் காத்தல் பெருந் தருமமாம். இதனை 'ஆவையும் பாவையும் மற்றறவேரையும் தேவர்கள் போற்றும் திருவேடத்தாரையும் காவலன் காப்பான் காவா தொழிவனேல் மேவு மறுமைக்கு மீளா நரகமே, என்னும் திருமந்திரத்தாலும் அறியலாம்.

தன்கீழ் வாழ்வோர் குற்றஞ் செய்யின், அக்குற்றத்தை நாடி, யாவரிடத்துங் கண்ணோட்டஞ் செய்யாது நடுவுநிலைமையைப் பொருந்தி அக்குற்றத்துக்குச் சொல்லப்பட்ட தண்டத்தை ஆராய்ந்து அவ்வளவினதாகச் செய்

(வளர்ச்சி 3ம் பக்கம்)

## பனங்கட்டி உற்பத்திக்கு

1ஆம் பக்க வளர்ச்சி

இலங்கை ஆசிரியர் பயிற்சியாளர் திரு. சு. பரநிருபசிங்கம் அவர்களும் இதிற் கலந்துகொண்டார் பனங்கட்டி உற்பத்திக்கு இது ஓர் உற்சாகமாயிருக்கும் உதவியாகும். ——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருவாசகம்

— புலவர் சிவங் கருணையபாண்டியனர் அவர்கள் —

( முன் வளர்ச்சி — )

இயற்கையின் உயிர்கட் கவ்வியல்பின்மை யாதலின் அவை அவனையொவ்வாமை தோன்ற அவ்வியல்புடையானைப் புண்ணியனென்றார்.

இனி அவன் அவ்வியல்பினனாயினும் உயிர்களையுந் தானாக்குந் தகைமையுடைமையானும் அவன் புண்ணியனாதல் பெறப்படும்.

காக்குமெங் காவலனே!
காண்பரிய பேரொளியே!

உரை: உயிர்களெல்லாம் அவை இடையூறெய்தாமல் அவையுறங்குங்காலும் பாதுகாத்து வருகின்ற எங்காவற்றொழிலாளனே! நின் வடிவு காண்டற்கு முடியாதவாறொளிரும் அளவில்லாத வொளியே!

ஒளி மிகுதியான் வடிவு தோன்றாது:

இனித் தன்னையல்லது பிறவற்றைக் காட்டாத பேரொளியுமாம்,

இனி ஈண்டுப் பேரொளி அறிவுப் பேரொளியென்றற் பொருட்டுக் காண்பரியவென விதந்துரைத்தாரென்றலுமாம்.

காக்குமெங் காவலனென்றது பழிப்பதுபோலப் புகழ்தலாகவு மிசைந்தது.

ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத
நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே
வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென்
சிந்தனையுள்
ஊற்றான வுண்ணாரமுதே யுடையானே!

உரை: ஆற்றுவெள்ளம் போலுமின்பவெள்ளமே! தலைவனே! உயிர்கட்கு எல்லாப் பேற்றினுமிக்க பேறுயினுனே! காற்றுப் புகாத அறையிற் காற்றின்மையான் அசையாது நின்ற விளக்கொளிப் பிழம்பு போலும் பிழம்பாய் இதுவெனவும் இற்றெனவுஞ் சொல்ல முடியாமல் எஞ்ஞான்றும் யாரும் தத்தமுள்ளத்துணர்வேயாயமைதியுறு நுண்ணிய வுணர்வுப் பிழம்பாய் அளவில்லாத பலவேறு மாறுதல்கள் உண்டாகின்ற இவ்வுலகத்திலே தானும் வெவ்வேறு கோலமாகி வந்து மயங்காது தெளிவாயிருக்கும் அறிவுடையவனே! தெளிவினு ளெல்லாஞ் சிறந்த தெளிவே! எனது நினைவினுள் ஊற்றெடுத்துச் சுரக்குமமுதே! உண்ணாது நோற்பார்க்கு அமுதம் உடையானுமாயிருப்போனே!

ஆற்று வெள்ளம் போலுமின்ப வெள்ளமேயென உவமத் தொகையாக்குக. மிக்காய்! மிக்கோனே! எல்லாரினும் அறிவு மிக்கோனெனினுமாம். தோற்றம், பிழம்பு, வடிவென்பன ஒரு பொருள். நின்ற சுடரொளித் தோற்றமாயென மாறுக.

இறை தவமிருக்குங்கால் அவனுணர்வு முள்ளமும் முடம்பு மெல்லாம் சிறிதுமசைவறாதொளி வீட்டிருந்தற்கு நின்ற சுடரொளித் தோற்றம் உவமை.

(வளரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்

வழ இல: எம் பி 13632

ஏழாலை வேலுப்பிள்ளை காசிநாதர் வழக்காளி

எதிராக

கட்டுவன் தம்பிமுத்து கந்தையா

கைபெண் தங்கச்சியம்மா எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் எம். பி. 13632ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை 1976ம் ஆண்டு வைகாசி மாதம் 10ந் திகதி (10-5-76) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 3339-00ம் 29-1-73 தொடக்கம் 31-7-.3 வரைக்கும் ரூபாய் 2000/- க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 438-60 சதம். இதில் ரூபாய் 1000-.0 கொடுபட்டுள்ளது 17-7-75 அன்று.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று கட்டுவன் இறை "பலட்டன்" நிலப்பரப்பு நாலில தென்கிழக்குப் பக்கமாய் நிலப்பரப்பு 1 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 3 டெசிகளும் இந்த நிலப்பரப்பு மூன்றுக்கு எல்லை கிழக்கு செல்லப்பா சினனத்தம்பியின் உரிமைக்காரருக்கும் இராசையா பெண் பாக்கியத்திற்கும் காசியர் செல்லத்துரைக்கு முரிய ஆதனங்கள். வடக்கு எதிராளியின் ஆதனம். மேற்கு வல்லிபுரம் கந்தையாவுக்குரிய ஆதனம். தெற்கு ஒழுங்கையும், செல்லப்பா சின்னத்தம்பியின் உரிமைக்காரரின் ஆதனமும் இவவெல்லைப்படி இதடங்கலும்.

அ. போ எதிர்மன்னசிங்கி

14, டேவிற் வீதி, யாழ்ப்பாணம், 2-2 76

கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

140 19 3

# மதுரை ஆதீனமும் உலக இந்து மாநாடும்

இந்த உலக இந்துமத மகாநாட்டை ஏற்பாடு செய்துள்ள மதிப்பிற்குரிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களுக்கு இந்து மக்கள் அனைவரும் நன்றி செலுத்தவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய இந்துமதம், பணடைக்காலத்தில், உலகமெல்லாம் பரவியிருந்ததென்பதற்கு, புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்ட மேல்நாட்டவர்களே சான்றுகள் தருகின்றார்கள். இந்துமதத்திலுள்ள பேருண்மைகளெல்லாம் நிரூபிக்கத் தக்கனவாக இருக்கின்றன. அவற்றை உணர்ந்து அவற்றிற்கான நிரூபணங்கள் கொடுத்து வந்தால். நமது இந்துமதக்கோட்பாடுகள் அனைத்தும் இரும்பவும் உலக மக்கள் யாவரும் ஒத்துக் கொள்ளக் கூடியனவாக ஏற்பட்டுவிடும் என்பதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் வேண்டாம்,

நாம் பூசிப்பதையும், செபிப்பதையும், தியானிப்பதையும் யார் யாரை நினைத்துச் செய்கிறோமோ, அவரவர்கள் அறிந்து அனுக்கிரகம் செய்கிறார்கள் என்று நமது மெஞ்ஞானிகள் கண்ட உண்மையை விஞ்ஞான மூலமாக நிரூபிக்கப்படப் போகிறது என்பதற்குள்ள அறிகுறிகள் தெரிகின்றன. உருஷ்யாவில் இறந்தவர்களுடைய உருவங்களை படம் பிடிக்கவும், ஜெர்மனியில் இறந்தவர்களுடைய சொந்தக்குரல்களை பதிவு செய்யவும் செய்கிறார்

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

வழ இல. / D. CO / 14

எதிராக — வழக்காளிகள்

வல்வெட்டி (1) ஆறுமுகம் சிவப்பிரகாசம்

(2) சிவப்பிரகாசம் பொன்னம்மா வழக்காளிகள்

எதிராக

கம்பர்மலை, உடுப்பிட்டி (1) வயிரவன் சின்னவன்

மரணம் (2) பெண் ஆண்டும்மணி

1. (a) கந்தையா சதாசிவம்

2. (b) பெண் தவமணி எதிரிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்த்த தீர்வைப்படியும் குறித்த நீதிமன்றத்தால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரப்படியும் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1976ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் திகதி (7-4-76) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக இருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று வல்வெட்டிக் குறிச்சியிலுள்ள "குருசியார்சீமா", "பெரியசீமா" கீழே இதில தெற்குப்புறமாக குளி 12 பிரிவுகளாகதெற்குப்புறமாக கி. பர. 5 குளி. 5. எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு ரேட்டு மேற்கு செல்லன் பெண் ஆச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு சங்கரன் பொன்னனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம, இதுடங்கலில் சொரியலாய் அரைவாசியும் இதறகுட்பட்ட சேர்க்கையிருக்கும் வீடு குசினி புதிய கிணறு கக்கூசு வடக்கு மதில் என்பனவும் இன்னும் பனைகள் வடலி வேம்பு பூவரசு எனபன நிற்றமாகவும்.

### கணக்கு விபரம்

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை | | ரூபா 8030-00 |
| 28-5-71 – 3-7-72 ரூபா 5000/க்கு வட்டி 12 வீதப்படி | | 650 00 |
| | மொத்தம | 8680-00 |
| 4-7-72 — 16-7-73 ரூபா 8680/க்கு 5வீதப்படி | | 434-00 |
| | | 9114-00 |
| 16-7-73 ல் கொடுபட்ட பணம் | | 1000-00 |
| | மிகுதி | 8114-00 |
| 17-7-73—7-8-73 ரூபா 8114/க்கு வட்டி 5 வீதப்படி | | 22-54 |
| | மொத்தம் | 8136-54 |
| 7-8-73 ல் கொடுபட்ட பணம் | | 500-00 |
| | மிகுதி | 7636-54 |
| 8-8-73 — 7-11-73 ரூபா 7636/54க்கு வட்டி 5 வீதபபடி | | 95-45 |
| | கூடிய தொகை | 7731-99 |
| 7-11-73 ல் கொடுபட்டது | | 500-00 |
| | மிகுதி | 7231-99 |
| 8-11-73 25-7-75 ரூபா 7231-99 க்கு வட்டி 5வீதப்படி | | 632-80 |
| | | 7864-79 |
| 10-9-75 ல் கொடுபட்ட பணம் | | 1000-00 |
| | மிகுதி | 6864-79 |
| 10-9-75—25-2-76 ரூபா 6864.79க்கு வட்டி 5 வீதப்படி | | 171-80 |
| அங்கீகரிக்கப்பட்ட செலவு 440-37½ | | 440-37½ |
| | மிகுதி | 7476-96½ |
| கொடுபட்டது | | 250-00 |
| இன்னும் வரவேண்டிய தொகை | ரூபா | 7226-96½ |

25-2-76 தொடக்கம் 7-4-76 வரை வட்டி 5 வீதப்படி ரூபா 7225-96½ க்கு கொடுபடவேண்டும்.

"உமாபதி"
நெல்லண்டை ரேட்டு,
துன்பனை,
பருத்தித்துறை.
17-3-76.
319 19-

R S. இராமநாதன், J. P.
கோட்டு விற்பனவு ஆணையாளரும்.
விலைமதிப்பாளரும். ஏலவிற்பனையாளரும்.
Commissioner of Sales, Valuer and Auctioneer.

## பெரியபுராணம்.....

( 2-ஆம் பக்க வளர்ச்சி )

வதே அரசனுக்கு முறையாம்.

'ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந் தியார் மாட்டுந் தேர்ந்துசெய் வஃதே முறை'

என்னும் வள்ளுவப் பெருந்தகை கூறியவாற்றாலும் அறிக.

கள் என்ற விபரம் வந்திருக்கிறது. அதுபோல, இந்துக்கள் கோயில்களில் பிரதிஷ்டை செய்து வழிபடுகிற மூர்த்திகள் எல்லாம் மேலுலகத்தில் அந்தந்த உருவத்திலிருந்து நம்மை ஆட்சிபுரிந்து வருகின்ற உதி தெய்வங்கள் என்ற உண்மையும் விஞ்ஞான முறையில் நிரூபிக்கப் பெறப்போகிறது. கடவுள் ஒருவராக இருந்தாலும் அவரது அதிகாரம் பெற்ற அதி தெய்வங்கள் பலவாக இருக்கின்ற பேருண்மையும், என்றுதான் யாவரும் ஒத்துக் கொள்வார்கள். எந்த நாட்டிலும் அரசாங்கம் ஒன்றாக இருந்தாலும் அதன் நிர்வாக அதிகாரிகள் பலராக இருந்து தீர வேண்டிய திருக்கிறதல்லவா? (வளரும்)

## மொழி ஆய்வு வளமாக விளைவதாகட்டும்

ஆய்ந்து ஓய்ந்து அறிவு வளர்த்தல் சால்புக்கு வய்ந்தோர்பணியாகும். மட்டு மாநகரில் இன்று ஆரம்பமாகும் தமிழ் ஆராய்ச்சி மாநாடு திருவருட்டுணையாற் பயனுடைத்தாக அமையும் என்று நாம் எண்ணுகின்றோம்.

மொழி ஆய்வு நெறியான வாழ்வுக்கு வழியாகும். ஈசடறக் கற்றலும் அதற்குத் தக நிற்றலும் தமிழ் மொழிச் சால்புக்குரிய பண்பு. எனவே ஆராய்ந்து எம மொழியின்பத்தை நுகர்ந்து அவ்வின்பம் பேரின்பத்துக்கு வழியாக அமைய வாழ்வதை இம்மாநாடு இலட்சியமாகக் கொண்டு எடுத்த பணியைத் தொடுத்து முடிக்க எம்பெருமான பெருங்கருணையை வேண்டுவோமாக.

———

## இலங்கை ஆசிரியர்சங்கம்

காங்கேசன்துறை வட்டாரக்கிளை

நடன நாடகப் போட்டிப்

### பெறு பேறுகள் 1976

———

தனிநடனம்

கீழ்ப்பிரிவு

1ம் இடம் ரூபினி இ. மகாஜனக் கல்லூரி

2ம் இடம் சு தாரகா யூனியன் கல்லூரி

3ம் இடம் பொ. தாரணா யூனியன் கல்லூரி

மேற்பிரிவு

1ம் இடம் செ. செந்தில்வாணி மகாஜனக் கல்லூரி

2ம இடம் கு. இரத்தினவதனி அருணோதயாக் கல்லூரி

குழுநடனம

1ம இடம் மகாஜனக் கல்லூரி

2ம் இடம் யூனியன் கல்லூரி

3ம் இடம் மல்லாகம மகா வித்தியாலயம்

நாடகம்

1ம் இடம் புனித ஹென்றியரசர் கல்லூரி

2ம் இடம் மகாஜனக கல்லூரி

3ம இடம் வீமன்காமம மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

கானறிந்(து) அப்பொருள் நாடஇட மில்லை
வானறிந்(து) அங்கே வழியுற விம்மிடும்,
ஊனறிந்(து) உள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறிந்(து) எங்கும் தலைப்பட லாமே.

There is no possibility of my searching for and attaining the Truth (God) with my egotistic knowledge. If I tread the path (of true Gnanam) taken by the great devotees, the Truth becomes manifest in all its glory and, realizing that brilliant Light within me, I attain perfection and become all-pervasive.

Hindu Organ

FRIDAY, MARCH 19, 1976

# Anniversary Attracting All-Round Homage

RAMANATHAN, the reputed name that stands as a symbol of the religious, cum cultural cum political renaissance of this renowned Isle lastingly lives in the memory of not merely Ceylonese but also in the thought of Asiatics, Americans, Britishers, among others.

The glorious past of this historic country is in effect the stimulating story of the amazing achievements of Sir Ponnambalam Ramanathan along with the convincing contributions of the Representatives in the Legislative and State Councils of the not fogotten near past. Hence the special significance of the Anniversary of the birth of this illustrious patriot, particularly when it is the first quarter beyond the first centenary celebrations.

Sixteenth of April of this year is the day of such remarkable significance. As has been aptly pointed out by Mr. S. Sivasubramaniam that veteran admirer of all that is beneficial and valuable to the future progress of our country, it is the duty of the present generation to re-publish the records of the great achievements of the patriots of the past in order that the Youth of today may become conscious of the magnificent tradition of those mighty men of service, Sir Ramanathan and others, and in due course hand down to posterity a precious pedigree of patriotism.

We, therefore, commend this commendable idea to responsible leaders in the religions, cultural and political spheres with a view to making the one hundred and twenty fifth Anniversary an event of everlasting significance to the world as a whole.

# Ponnambalawaneshwara Temple And Its Pious Devotee

(In connection with the 125th birth Anniversary of Sir P. Ramanathan we reproduce from 'The Life of Sir Ponnambalam Ramanathan by M. Vythilingam, a reference to the devotion the Great Leader had, to this Ancient Temple.)

"In 1907, Ramanathan embarked on what may rightly be termed a stupendous venture, the re-building of Ponnambala-vaneshwarar Temple in Colombo. An idealist who was also a man of action, he set out not to build a temple in the humdrum, prosaic sense of the word but to raise a monument to the glory of God and the service of man, one that would surpass every other in existence in solidity and magnificence, in architectural beauty and structural excellence, in its power of spiritual appeal. In so doing, he aimed at transmitting to his people the true conception of a temple as the radiant centre of religion and art for mankind. It was one of his grandest achievements. It is no less the most exquisite piece of Hindu architecture in the country.

The temple was originally built and endowed by his father Ponnambala Mudaliyar in 1856 to supply a long felt want, a place of worship for the Hindus of Colombo Ponnambala Mudaliyar, as has already been observed, was before everything else a holy and humble man at heart in whom the love of God and the passion for service overshadowed every other impulse. Profoundly distressed by the spectacle of large numbers of Hindus in the metropolis becoming oblivious of their ancestral faith for want of a common place of worship and straying into other folds, he made a firm and pious resolve to discover a remedy as best he could. He acquired at Sea Street a plot of land, the property of one Captain John Foulstone. There single-handed he built a temple at an immense cost and endowed it with a thousand acres of highly productive coconut land and several buildings within the city. He also had a Trust Deed executed, vesting the management of the temple in the eldest surviving member of the family. Accordingly, on Ponnambalam's death in 1887, the management devolved on his eldest son Coomaraswamy. On Coomaraswamy's death in 1905, Ramanathan being the eldest surviving member, became manager. He was truly a chip of the old block, for, with him as with his devout father, religion was the chief motive force, the ruling passion of life. Moreover, his faith in the value and efficacy of temple-worship was unquestioning, for had he not learned from *Auvai*, the ancient Tamil poetess, of whose pithy and luminous maxims he was a lifelong student and commentator, that temple-worship confers immeasurable good on human-kind?

(To be continued)

# Kalayogi Ananda K. Cumarasamy On Indian Music

(Continued from last issue of 27-2-76)

The possible number of ragas is very large, but the majority of systems recognise thirty six, that is to say six ragas, each with five raginis. The origin of the ragas is various: some, like Pahari, are derived from local folk-song, others, like Jog, from the songs of wandering ascetics, and still others are the creation of great musicians by whose names they are known. More than sixty are mentioned in a Sanskrit-Tibetan vocabulary of the seventh century, with names such are 'With-a-voice-like-a-thunder-cloud', 'Like-the-god-Indra', and 'Delighting-the-heart'. Amongst the raga names in modern use may be cited 'Spring', 'Evening beauty', 'Honey-flower', 'The swing', 'Intoxication'.

Psychologically the word raga, meaning coloring or passion, suggests to Indian ears the idea of mood; that is to say that precisely as in ancient Greece, the musical mode has definite *ethos*. It is not the purpose of the song to repeat the confusion of life, but to express and arouse particular passions of body and soul in man and nature. Each raga is associated with an hour of the day or night when in may be appropriately sung, and some are associated with particular seasons or have definite magic effects. Thus there is still believed the well known story of a musician whose royal patron arbitrarily insisted on hearing a song in the Dipak raga, which creates fire: the musician obeyed under protest, but as the song proceeded, he burst into flames, which could not be extinguished even though he sprang into the waters of the Jamna. It is just because of this element of magic, and the association of the ragas with the rhythmic ritual of daily and seasonal life, that their clear outlines must not be blurred by modulation: and this is expressed, when the ragas are personified as musical genii, by saying that 'to sing out of the raga' is to break the limbs of these musical angels. A characteristic story is related of the prophet Narada, when he was still but a learner. He thought that he had mastered the whole art of music; but the all-wise Vishnu, to curb his pride, revealed to him in the world of the gods, a spacious building where there lay men and women weeping over their broken arms and legs. They were the ragas and raginis, and they said that a certain sage of the name of Narada, ignorant of music and unskillful in performance, had sung them amiss, and therefore their features were distorted and their limbs broken, and until they were sung truly there would be no cure for them. Then Narada was humbled, and kneeling before Vishnu prayed to be taught the art of music more perfectly: and in due course he became the great musician priest of the gods.

Indian music is a purely melodic art, devoid of any harmonised accompaniment other than a drone. In modern European art, the meaning of each note of the theme is mainly brought out by the notes of the chord which are heard with it; and even in unaccompanied melody, the musician hears an implied harmony. Unaccompanied folksong does not satisfy the concert-goer's ear; as pure melody it is the province only of the peasant and the specialist. This is partly because the folk-air played on the piano or written in staff notation is actually falsified; but much more because under the conditions of European art, melody no longer exists in its own right, and music is a compromise between melodic freedom and harmonic necessity. To hear the music of India as Indians hear it one must recover the sense of a pure intonation and must forget all implied harmonies.

( To be continued )

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday March 19, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKAMUS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org